Guests Control Order

*306 *Q.*—Thiru K. VINAYAKAM : Will the Hon. the Minister for Food and Revenue be pleased to state—

(*a*) whether it is a fact that the Government have amended the "Madras Guests Control Order, 1965" restricting the number of persons to be fed at ordinary parties to 25 and at marriages or funerals at 50 from 14th April 1967 ; and

(*b*) if so, the reasons for such amendment ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : (அ) தமிழ்நாடு 1965-ம் ஆண்டு விருந்தினர் கட்டுப்பாட்டு ஆணையில் உள்ள கட்டுப்பாடு, தடை செய்யப்பட்ட உணவு பொருட்களைப் பரிமாறுவதற்குமட்டுமே பொருந்தும். 1967-ம் ஆண்டு ஏப்ரல் 13-ம் தேதியிலிருந்து இந்த ஆணை திருத்தியமைக்கப்பட்டுள்ளது.

(இ) தடை செய்யப்பட்ட உணவு வகைகளைப் பரிமாறுவதனால் திருமணம், ஈமக்கடன் போன்ற விருந்தில் 50 பேருக்கும், சாதாரண விருந்தில் 25 பேருக்கும் உணவளிக்கலாம் என்ற இந்த எண்ணிக்கை மிகவும் குறைவு. இந்தக் கட்டுப்பாட்டினைத் தளர்த்தும்படி அரசிற்கு அடிக்கடி வேண்டுகோள்கள் வந்தன. அதனால் அரசு இந்த எண்ணிக்கையை சாதாரண விருந்தானால் 50 ஆகவும் திருமணம் முதலிய விருந்தானால் 100 ஆகவும் உயர்த்துவதென முடிவு செய்துள்ளது. தடைசெய்யப்பட்ட உணவு வகை என்பதற்குரிய விளக்கமும் தளர்த்தப்பட்டுள்ளது. முதலில் இது எல்லா தானியங்களிலிருந்தும் தயாரிக்கப்படும் பொருட்களையும் அவற்றின் பண்டங்களையும் குறித்தது. சென்னைக் கடைகளில் அரிசியைத் தவிர, மற்ற தானியங்கள் அதிகமாக கிடைக்காததால் தடை செய்யப்பட்ட உணவு வகை என்பதன் விளக்கம் மாற்றப்பட்டு அரிசியையும், அரிசியிலிருந்து தயாரிக்கப்படும் பொருட்களையும், அவற்றின் பண்டங்களையும் மட்டுமே இப்போது குறிக்கின்றது.

Thiru K. VINAYAKAM : Is the Minister aware of the fact that the Madras Guests Control Order, 1965, was not followed in spirit or even in letter and frequently it has been violated by feeding a large number of guests in different sets of rooms which usually came to one thousand and odd and is he also aware of the fact that the relaxation of this order does not improve the position very much.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : இந்த உத்தரவு ஆணைகள் எல்லாம் மீறப்படுகின்றன என்பதைக் கனம் உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். அரசின் ஆணைகளை மீறப்படாமல் பார்த்துக்கொள்வது பொது மக்கள் தலைவர்களுடைய பொறுப்பு. நமது உணவு நெருக்கடியில் சிக்கனத்தை எற்படுத்துவதற்காகத் தான் இந்த விதி முறைகள், ஆணைகள் இருக்கின்றன. அதற்குப் பதிலாக இதையே எடுத்துவிடலாம் என்று குறிப்பிட்டார்கள். அப்படிச் செய்வது உணவு நெருக்கடியை அதிகரிக்கத் தான் வழி செய்யும்.

திரு. அ. லெ. சுப்பிரமணியன் : தலைவர் அவர்களே, இந்த விருந்தினர் கட்டுப்பாடு சட்டத்திலிருந்து தப்புவதற்காகச் சிலர், திருமண அழைப்பிதழில் "Bring your ration" என்று அச்சடித்துவிட்டு, திருமண வீட்டுக்காரர்களே விருந்து கொடுக்கிறார்களே, அதுபற்றி என்னென்ன நடவடிக்கை எடுக்கப்படும் ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : இதுபோன்ற தந்திர உபாயங்கள் தவிர்க்கப்பட வேண்டும்.

திரு. ஆர். பொன்னப்பநாடார் : இந்த ஆணையை மீறியவர்கள்மீது அரசாங்கத் தரப்பிலிருந்து நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : ஆணையை மீறுகிறவர்கள் மீது "கிரிமினல் புரசீஜர் கோட்" பிரகாரம் வழக்குத் தொடர அரசாங்கத்திற்கு அதிகாரம் இருக்கிறது. ஆனால் அதிகாரத்தை அரசாங்கம் பயன்படுத்தவில்லை.

திரு. டி. எஸ். ஆதிமூலம் : விருந்துகளில் முக்கியமாக, ஏழைகளுக்குச் சாப்பாடு போட வேண்டுமென்று நினைக்கிறார்கள். ஆயிரம் ஏழைகளுக்குச் சாப்பாடு போடுவது ஒரு தர்ம காரியம். கலியாணம் போன்ற வைபவங்களில் இந்த மாதிரி விருந்து வைத்து ஏழைகளுக்குச் சாப்பாடு போடுவதற்குத் தடையாக இருப்பதால், இது ஒரு அர்த்தமில்லாத ஆர்டர் என்பது அரசாங்கத்திற்கு ஏன் தெரியவில்லை ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : கனம் உறுப்பினர் அவர்களுடைய கருத்தை இந்த அரசாங்கம் ஏற்றுக்கொள்ள முடியாது. ஒரு நெருக்கடி நேரத்தில் நம்முடைய சமுதாயத் தேவைகளைக் குறைத்துக் கொள்ள வேண்டுமென்பதுதான் இந்த ஆணையின் உள்ளடக்கம்.

Wheat for Madras

*307 *Q.*—THIRU K. VINAYAKAM : } THIRU K. B. S. MANI : } Will the Hon. the Minister for Food and Revenue be pleased to state—

(*a*) whether it is a fact that the Soviet Union of Russia have supplied about six thousand tons of wheat to Madras State ; and

(*b*) if so, whether it was supplied as a gift?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : (அ) இல்லை.

(இ) வினாவிற்கு இடமில்லை.

THIRU K. VINAYAKAM : Is it not a fact that a shipload of wheat arrived in Madras port and the Chief Minister as well as the Minister for Food went to the ship and accepted the present for distribution in our State ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : ஆம், ஐயா. சோவியத் ரஷ்யா இந்தியாவுக்கு 2 லட்சம் டன் கோதுமைப் பொருளைக் கொடுக்க முன்வந்தது. அதில் 6 ஆயிரம் டன் அளவுள்ள கோதுமைப் பொருளை ஏற்றிக்கொண்டு வந்துள்ள ஒரு கப்பல் சென்னைத் துறைமுகத்திற்கு வந்துள்ளது. அந்தக் கப்பலிலுள்ள கோதுமைப் பொருளை நம்முடைய முதலமைச்சர் அவர்களிடம் கொடுத்தார்கள். அதை வாங்குகிற பாக்கியம் தான் நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறதே தவிர, பகிர்ந்து கொள்ளும் அதிகாரம் நமக்கு இல்லை—மத்திய அரசாங்கத்திடத்தில்தான் அந்த அதிகாரம் இருக்கிறது.

திரு. கே. பி. எஸ். மணி : சார், இப்படி நம் மாகாணத்திற்கு வேண்டிய அரிசியை, மத்திய அரசாங்கம் கொடுத்துத்தான் நாம் வாங்க வேண்டுமென்ற காலம் எதுவரையில் நீடிக்கும் ?

மாண்புமிகு திரு கே. ஏ. மதியழகன் : இந்திய அரசியல் சட்டத்திற்கு உட்பட்ட குடிமக்களாகச் செயல்படுகிற வரையில் அது எப்போதும் இருக்கும் என்பதுதான் இதன் பொருள்.